# தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதியுதவியுடன்
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை**
மற்றும்
**முனைவர் மா. ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனம்**
இணைந்து நடத்தும்

## இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம்

தொகுதி - II

**UGC sponsored two day National Seminar on**
**HUMAN RIGHTS IN TAMIL LITERATURE**



பதிப்பாசிரியர்
**முனைவர் க. முருகேசன்**

157. *Dr. T. Muraleeswari* 712
Atrocities of Bonded Labour System Portrayed in Mahasweta Devi's Select Short Stories

158. *கி. சுப்பிரமணியன்* 718
கோவூர் கிழார் பாடல்களில் மனித உரிமைக் குறிப்புகள்

159. *அ. ராஜி* 722
இலக்கியங்களில் மனித உரிமைகள்: ஒரு பருந்துப் பார்வை

160. *சு. மலர்விழி* 726
ஆண்டாள் பிரியதர்சினியின் கவிதைகளில் மனித உரிமைகள்: திருநங்கையரை முன்னிறுத்தி ஒரு தேடல்

161. *முனைவர் வெ. சுகந்தா* 731
தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

162. *முனைவர் பா. வேலம்மாள்* 734
தமிழ் இலக்கியங்களில் பெண்ணுரிமை சிந்தனைகள் (கவிதைகளை முன்வைத்து)

163. *முனைவர் மொ. இரவிக்குமார்* 739
தமிழ்க் கவிதைகளில் காணலாகும் மனித உரிமைகள்

164. *முனைவர் இரா. மணிமேகலை* 744
ஐவகை மன்றத்து அமைதி

165. *முனைவர் க. முருகேசன்* 749
வைரமுத்துவின் படைப்பில் மனித உரிமைப் பதிவுகள்

166. *ஆ. நித்யா* 756
சுஜாதாவின் மனித உரிமைப்பற்றிய சமூகப்பார்வை

167. *ம. விவேக் பிரபு* 760
வைரமுத்துவின் திரைப்பாடல்களில் பெண்களின் உரிமைக் குரல்

168. *முனைவர் க. பழனிவேல்* 765
புரட்சிக்கவியில் மனித உரிமைச் சிந்தனைகள்

169. *இரா. அபிமன்யு* 769
மாத்திரை சிறுகதையில் பெண்ணுரிமை

170. *முனைவர் சு. சதீஷ்குமார்* 774
சூதுபோர்ச் சருக்கத்தில் மனிதஉரிமை மீறல்கள்

171. *ச. மல்லிகா* 779
பிரபஞ்சனின் சிறுகதைகளில் பெண்ணுரிமை

172. *மு. ஜெயலட்சுமி* 784
அகநானூறு காட்டும் பெண்ணுரிமை

173. *முனைவர் ந. இரஞ்சன்* 791
தமிழ் மண்ணின் உரிமை காப்போம்

174. *முனைவர் கு. முத்துக்குமார்* 795
இலக்கியப் படைப்பாளிக்கெதிரான உரிமை மீறல்

# 173. தமிழ் மண்ணின் உரிமை காப்போம்

**முனைவர் ந. இரஞ்சன்**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

***"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்***
***மெய்ப்பொருள் காண்ப தறிவு" (குறள்)***

நாடு விடுதலையடைந்திருந்தாலும் கூட நாட்டில் வசிக்கும் மக்கள் தங்களுக்குரிய அடிப்படையான உரிமைகளை முழுதும் பெற்றிருக்கின்றார்களா? என்று ஆராய்ந்தால் இல்லை என்றே கூற முடியும். தனிமனிதன், தன்னுடைய கருத்தையோ படைப்பையோ வெளியிடும் உரிமை அவனுக்கு முழுமையாய்க் கிடைக்கவில்லை. உரிமை என்பது யாரிடமும் கேட்டுப் பெறவேண்டியதில்லை. மனிதன் வாயிலிருந்து சொல் வருவதற்கோ அவன் எழுதுகோலில் இருந்து சொற்கள் பிறப்பதற்கோ அவனுடைய மூளை சிந்திப்பதற்கோ யாரிடமிருந்தும் உரிமை வாங்கவேண்டிய தேவை இல்லை. அப்படிச் சுதந்திரமாகப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் சிந்திப்பதற்கும் எந்நாட்டினர்க்குச் சுயஉரிமை இருக்கிறதோ அந்த நாடே சுதந்திர நாடு.

## மொழியின் மரணம்

வேலியே பயிரை மேய்ந்து கொண்டு இருக்கின்ற நிலமாக இன்று தமிழ்நிலம் மாறிக்கொண்டு வருகின்றது. தமிழ் மண்ணில் தமிழ்மொழியில் பேசுவதற்குரிய உரிமைகூட இன்று பல்வேறு கல்வி நிறுவனங்கள் கொடுப்பதில்லை. உரிமை என்பது இன்று பொருளாகவே பார்க்கப்படுகிறது. அதனால்தான் கேட்டுப் பெறவேண்டியுள்ளது. சில இடங்களில் கேட்டாலும் கிடைப்பதில்லை. தமிழ்நாடு வேண்டும், தமிழ்ப் பண்பாடு வேண்டும் ஆனால் தமிழ்மொழி வேண்டாம். என்ன கொடுமை இது தமிழ்மொழிக்கு வந்த வேதனை. சோறு என்று சொல்வதற்குக் கூட, கூச்சப்பட வேண்டிய நிலை தமிழ் மண்ணில்தான் உள்ளது. சாதம் என்றால் இனிக்கிறது. சோறு என்றால் கசக்கிறது என்று நினைப்பவர்தான் இன்று தமிழ் நாட்டில் வாழும் தமிழர்களின் நிலையாக உள்ளது. நல்லவேளை தமிழர் திருநாளான பொங்கலுக்கு மட்டும் "பொங்கச்சோறு" என்று சொல்கின்றோம். அந்த அளவிலாவது தமிழ்மொழி இருக்கிறதே என்று மகிழ்ச்சியடைய வேண்டியுள்ளது.

நாட்டில் நடக்கின்ற பல்வேறு நாச வேலைகளுக்கும் மொழி வழியில் வாழ்வியல் கல்வியைக் கற்றுத் தராததே காரணம் எனலாம். இன்றுள்ள பெற்றோர்கள் தங்கள் குழந்தை ஆங்கிலத்தில் "மம்மி",